# இறையியலின் அறிமுகம்

## Introduction to Theology (இறையியல் அறிமுகம்)

### A. Meaning and Definition of Theology (இறையியலின் பொருள் மற்றும் வரையறை)

'தியாலஜி (Theology)' என்று அழைக்கும் இந்த சொல் இரண்டு கிரேக்க வார்த்தையில் இருந்து வந்ததாகும். ஒன்று 'தியோஸ்' (Theos) மற்றொன்று 'லோகோஸ்' (Logos) என்பதாகும் 'தியோஸ்' என்பதற்கு தேவன் என்றும் 'லோகோஸ்' என்பதற்கு வார்த்தை என்றும் பொருளாகும். ஆகவே 'தியாலஜி' என்பது தேவனைப் பற்றிய வார்த்தையை படிப்பதாகும்.

இறையியல் பற்றி 'சார்ஸ் ரெய்ரியின்' வரையறை: தேவனைப் பற்றிய சத்தியங்களை கண்டுபிடித்து அவைகளை முறைப்படுத்தி வழங்குவதே இறையியல் என்று சொல்லியிருக்கிறார்

### B. Types of Theology (இறையியலின் வகைகள்)

1. Biblical Theology (வேதாகம இறையியல்)

ஒரு குறிப்பிட்ட வேதாகமத்தின் காலம் அல்லது ஒரு குறிப்பிட்ட வேதாகம எழுத்தாளர்களின் எழுத்துக்களை எடுத்து ஆய்வு செய்து படிப்பதே இந்த வகையாகும்.

- உ.ம்: பவுலின் எழுத்துக்களையெல்லாம் எடுத்து ஆய்வு செய்வது படிப்பது பவுலின் இறையியல் என்று அழைக்கப்படுவதுண்டு (Pauline Theoligy)
- அதேபோல யோவானுடைய புத்தகங்களை எடுத்து ஆய்வு செய்து படிப்பது யோவானின் இறையியல் என்று அழைக்கப்படுகிறது (Johannine theology)
- காலங்களின் அடிப்படையில் கூட நாம் முற்பிதாக்களின் காலகட்டங்களை எடுத்து அவர்களை குறித்து ஆய்வு செய்து படிக்கலாம். அதற்கு முற்பிதாக்களின் இறையியல் என்று அழைக்கப்படுகிறது (Patriarchal theology)

2. Historical Theology (சரித்திர பூர்வமான இறையியல்)

ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் வரலாற்று முன்னேற்றத்தை அறிந்து அதை ஆய்வு செய்து படிப்பதே இந்த சரித்திர பூர்வமான இறையியல் ஆகும்.

- உ.ம்: 'திரித்துவம்' என்ற உபதேசம் ஆரம்ப நாட்களில் பயன்படுத்தப்பட்ட விதம் அது எப்படி வளர்ச்சி அடைந்து அது வேதாகமம் மூலமாக பாதுகாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கிறது; இதனுடைய தவறான கருத்து என்ன சரியான கருத்து என்ன என்பதையெல்லாம் குறித்து ஆய்வு செய்வதே இந்த இறையியல் ஆகும்.

3. Dogmatic Theology (சித்தாந்தங்கள் அல்லது சமய கோட்பாடுகளின் இறையியல்)

ஒரு கிறிஸ்தவ அல்லது இறை இயல் குழுவினரின் சட்டதிட்டங்களை அல்லது உறுதிகோட்பாடுகளை ஆய்வு செய்து படிப்பதே சித்தாந்த இறையியல் என்பதாகும்.

- உ.ம்: ரோம கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். அவர்கள் பின்பற்றுவதற்கும் விசுவாசிப்பதற்கும் சில உறுதி கோட்பாடுகள் இருக்கின்றது அதை நாம் ஆய்வு செய்து படிப்போம் என்று சொன்னால் அது ரோம கத்தோலிக்க இறையியல் என்பதாகும்.

4. Systematic Theology (முறையான இறையியல்)

தேவனையும் தேவனுடைய கிரியைகளையும் பற்றிய சத்தியங்களை ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட ஆதாரங்களிலிருந்து நாம் சேர்த்து அதை ஒழுங்குபடுத்தி ஒப்பிட்டு வழங்கி தற்காப்பு செய்வதே இந்த முறைப்படுத்தப்பட்ட இறையியல் ஆகும்.

### C. Prerequisites for Systematic Theology (முறையான இறையியலின் முன்நிபந்தனைகள்)

1. பரிசுத்த ஆவியின் தூண்டுதலினால் தான் வேதாகமம் கொடுக்கப்பட்டுள்ளது
2. வேதத்தில் பிழை இல்லை என்ற நிச்சயம் வேண்டும்
3. முறையான வியாக்கியான கோட்பாடுகள் பயன்படுத்தவேண்டும்
4. வேதாகம வெளிப்பாட்டில் முன்னேற்றம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்.
5. மனித கட்டுப்பாடுகளை உணர்வது அவசியம்
6. பரிசுத்த ஆவியின் உதவியால்தான் இதை கற்றுக்கொள்ள முடியும் என விசுவாசிக்க வேண்டும்

### D. Necessity for Systematic Theology (முறையான இறையியலின் தேவை)

1. ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவுகிறது (1 பேதுரு 2:3; 2 தீமோ 3:16,17))
2. நாம் விசுவாசிக்கிற காரியங்களை மற்றவர்களுக்கு கற்பிக்க உதவுகிறது (2 தீமோ 2:2; மத் 28:20)

3. நம்முடைய விசுவாசத்தை (உபதேசத்தை) தற்காத்துக்கொள்ள உதவுகிறது (1 பேதுரு 3:15; தீத்து 1:9)

E. Sources Used In Systematic Theology **(முறையான இறையியலில் பயன்படுத்தப்பட்ட ஆதாரங்கள்)**

1. பரிசுத்த வேதாகமம்
2. பாரம்பரியங்கள்
   - உறுதி கோட்பாடுகள்
   - மனித பகுத்தறிவாதம்
   - வேதாகம அடிப்படையிலான பாரம்பரியங்கள்

F. Branches of Systematic Theology **(முறையான இறையியலின் பிரிவுகள்)**

1. Bibliology (வேதாகம இயல்) - புத்தகத்தை (வேதாகமம்) குறித்த படிப்பு.
2. Theology Proper (தேவ இயல்) - தேவனைப் பற்றிய படிப்பு
3. Christology (கிறிஸ்து இயல்) - கிறிஸ்துவைப் பற்றிய படிப்பு
4. Pneumatology (பரிசுத்த ஆவியானவர் இயல்) - பரிசுத்த ஆவியானவரை குறித்த படிப்பு
5. Angelology (தூதர் இயல்) - தூதர்களை குறித்த படிப்பு
6. Anthropology (மானிட இயல்) - மனிதனை குறித்த படிப்பு
7. Hamartiology (பாவ இயல்) - பாவத்தைப் பற்றிய படிப்பு
8. Soteriology (இரட்சிப்பு இயல்) - இரட்சிப்பைக் குறித்த படிப்பு
9. Ecclesiology (சபையியல்) - சபையை குறித்த படிப்பு
10. Eschatology (வருங்கால இயல்) - கடைசி கால சம்பவங்களை குறித்த படிப்பு